செ.வெ.எண்:21 நாள்: 17.03.2021

**சட்டப்பேரவை பொதுத்தேர்தலின் வாக்குப்பதிவு எண்ணிக்கை மையமான அரசினர் தொழில்நுட்ப கல்லூரியில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குப்பதிவுகளை எண்ணும் மையமான அரசு தொழில்நுட்ப கல்லூரியில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து இன்று (17.03.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது, மாநகர காவல் ஆணையர் திரு.சுமித்சரண் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாநகர காவல் துணை ஆணையர் திரு.ஸ்டாலின், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இவ்வாய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சட்டப்பேரவை பொதுத் தேர்தல்-2021 முன்னேற்ப்பாட்டு பணிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கோவை வடக்கு, கோவை தெற்கு, தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர் கவுண்டம்பாளையம், சூலூர், மேட்டுப்பாளையம், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை, ஆகிய 10 சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகளை எண்ணும் மையமான

கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சட்டப்பேரவை பொதுத் தேர்தலின் போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் வரையில் இவ்வளாகத்திலேயே அமைக்கப்படும் பாதுகாப்பு அறைகளிலேயே (Strong Room) வைத்து பாதுகாக்கப்படுவதால் காப்பு அறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் தேவைப்படும் அடிப்படை கட்டமைப்புகளான மின்சார வசதி, பிரத்தேய தடுப்புகள் அமைத்தல், வாக்கு எண்ணும் அறைகளை விரிவுப்படுத்துதல், குடிநீர் வசதி, வாக்குப்பதிவு இயந்திரங்களை முறையாக எடுத்துச் செல்லும் வகையிலான பிரத்யேக நடைபாதை வசதி, முழுபாதுகாப்பு வசதிகளுடன் கூடிய மின்னனு வாக்குப்பதிவு இயந்திர காப்பு அறை உள்ளிட்டவற்றினை இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி அமைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**